1973 பிப்ரவரி 28]

Artificial rain making

*188. Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state :

(a) whether there is any proposal at present to conduct experiments on artificial rain making; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை

திரு. என். டென்னிஸ்: சில வெளிநாடுகளில் இது வெற்றிகரமாக நடத்தப்பட்டுப் பயிர் பாதுகாப்பிற்கு, விவசாய உற்பத்திக்கு உதவியாக இருப்பதாகத் தெரிகிறது. எனவே, வறட்சிக் காலங்களிலாவது பயிர்களைப் பாதுகாக்க இவ்வித முறை கையாளப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இந்த செயற்கை முறையில் மழை உண்டாக்கும் சோதனை 1955-ல் இருந்து 67 வரையில் நடத்தப்பட்டது. அதற்கு ஒரு குழு அமைக்கப்பட்டு அந்தக் குழுவினர் பரிசிலனை செய்து அதற்கு இப்போது சாத்தியக்கூறு இல்லை என்று தெரிவித்தார்கள். அதற்குப் பிறகு 58-லிருந்து 67 வரையில் கோவை, குந்தா, திருச்சி ஆகிய இடங்களில் துவக்கப்பட்டு அதற்கு ஏறத்தாழ ரூ. 41,778 செலவு செய்யப்பட்டு அதுவும் பயன் உள்ளதல்ல என்று தெரிவிக்கப்பட்ட பிறகு நிறுத்திவைக்கப்பட்டது.

திரு. நா. வீராசாமி: செயற்கை மழை குறித்து மின்வாரியத்தில் சேதுராமன் என்பவர் ஐந்தாண்டுக் காலம் அது குறித்து விஞ்ஞான ரீதியில் முயற்சி செய்து செயற்கை மழையை வரவழைக்கலாம், ஆனால் கொஞ்சம் அதிகம் செலவாகும் என்று அரசுக்கு ஒரு அறிக்கை அனுப்பினாரா? அதிகமாக செலவாகும் என்றாலும் இப்படிப்பட்ட நேரங்களில், மின்சார வெட்டு போன்ற நிலைமைகள் ஏற்படும்போது குந்தாப் பகுதியில் இப்படிப்பட்ட செயற்கை மழையை வரவழைக்க நம் அரசிடம் பணம் இல்லை என்று சொன்னாலும் மத்திய அரசு இப்படிப்பட்ட முயற்சிகளில் பணம் கொடுத்து செயற்கை மழையை வரவழைக்க நம் அரசு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொள்ளுமா?

[1973 பிப்ரவரி 28

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அதுபற்றிய விவரம் இல்லை. 4 : 1 என்ற விகிதத்தில் கால்சியம் க்ளோரைடு, சோடியம் க்ளோரைடு சேர்ந்த கலவையை எலக்ட்ரிக் ஆர்க் கொண்டு 3,000 டிகரி சென்டிகிரேட் உஷ்ணத்தில் ஆவியாக்கி மேகத்தை தூண்டும் செய்முறை பயன்படுத்தப்பட்டது. பணம் விரயமாயிற்றே தவிர பயன் இல்லை.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, செயற்கை மழையைப் பற்றிப் பேசினார்கள். "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை" என்று சொல்வார்கள். "தெய்வந்தொழா அள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அப்படிப்பட்ட கற்புக்கரசிகளைக் கூப்பிட்டு மழை பெய்விக்க இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அந்த குறளுக்கே அர்த்தம் வேறு என்பதை கனம் அங்கத்தினர் அவர்கள் உணருவார்கள். பெய்யெனப்பெய்யும் மழை என்றால், பெய்ய வேண்டிய காலத்தில் பெய்கின்ற மழையைச் சொல்வார்களே தவிர, பெண்களெல்லாம் பெய் என்றால் பெய்வது மழை அல்ல.

படிப்புதவித் தொகை குறித்த அறிவிப்புகள்.

*189 வினு. திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆண்டுதோறும் அரசாங்க கெஜட்டில் பிற்பட்ட வகுப்பினர் நலத்துறைத் தலைவரோ அல்லது அரிசன நலத்துறைத் தலைவரோ உதவிப்பணம் கொடுப்பது சம்பந்தமான அறிக்கை வெளியிடுகிறார்களா?

(இ) 1971-72, 1972-73 ஆண்டுகளில் பின்தங்கிய, அரிசன மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை வழங்குவது குறித்து வெளியிடப்பட்ட அறிக்கைகள் குறித்த விவரம் யாவை?